பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

23 08 2024 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. இஸ்ரோ விண்வெளித்துறையில் மட்டுமன்றி நாட்டின் சமூக பொருளாதார மேம்பாட்டிலும் முக்கிய பங்காற்றி வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. போலந்து பயணத்தை முடித்துக் கொண்டு உக்ரைன் சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று அந்நாட்டு அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கியை சந்தித்து பேசவுள்ளார்.

3. இந்தியாவும் - அமெரிக்காவும் நீண்டகால நட்பு நாடுகள் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

4. மத்திய உள்துறை செயலராக மூத்த ஐ ஏ எஸ் அதிகாரி திரு கோவிந்த் மோகன் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

5. இத்தாலி சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Siddhant Banthia** - அமெரிக்காவின் **Tennyson whiting** இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நாட்டின் முதலாவது தேசிய விண்வெளி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இஸ்ரோ விண்வெளித்துறையில் மட்டுமன்றி நாட்டின் சமூக பொருளாதார மேம்பாட்டிலும் முக்கிய பங்காற்றி வருவதாகத் தெரிவித்தார்.

புதிய விண்வெளி கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதில் நமது விஞ்ஞானிகளின் திறன் மேம்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வான்வெளி தொடர்பாக கற்பனையில் இருந்தவற்றின் உண்மைகளை வெளிக் கொண்டு வரும் முயற்சியில் இஸ்ரோ சிறப்பான பணியை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய அறிவியல் மற்றும் விண்வெளித்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங், பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு விண்வெளித்துறையை முன் எப்போதும் இல்லாத அளவுக்கு உச்சத்துக்கு கொண்டு சென்றிருப்பதாகக் கூறினார்.

கடந்த 70 ஆண்டுகளாக பின்தங்கியிருந்த விண்வெளித்துறை புதிய உத்வேகத்துடன் சாதனைகள் படைத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இஸ்ரோ தலைவர் திரு சோம்நாத் பேசுகையில், நாட்டின் அனைத்து பகுதிகளிலும் தேசிய விண்வெளி தினத்தை கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவீத்தார்.

மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள், துறைகள், கல்வி நிறுவனங்கள், அறிவியல் அமைப்புகள், அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் அதிக அளவில் ஆர்வமுடன் இந்நாளை கொண்டாடி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் இஸ்ரோ நடத்திய ரோபோட்டிக் சாதனை போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.

இந்திய விண்வெளி தினத்தையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்துச் செய்தியில், நிலவின் தென்துருவத்தில் சந்திரயான்-மூன்று தரையிறங்கிய வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வை ஒட்டுமொத்த உலகமும் பாராட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் விண்வெளி சாதனையில் இது ஒரு மைல்கல் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் விண்வெளி பயணத்தில் இது தொடக்கம் என்றும், மேலும் பல சாதனைகளை இந்திய விண்வெளித்துறை படைக்க இருப்பதாகவும் திரு நரேந்திமோடி தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இந்த ஆண்டு தேசிய விண்வெளி தின கொண்டாட்டம் நாட்டின் விண்வெளி சாதனைகளை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சந்திரயான்-மூன்று தொடங்கி ககன்யான் வரை இஸ்ரோவின் பயணம் தொடர்வது நமக்கு உற்சாகத்தை ஏற்படுத்தி இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

நமது விஞ்ஞானிகளின் திறமைகளுக்கு எல்லை கிடையாது என்பதை இஸ்ரோவின் சாதனைகள் நிரூபித்திருப்பதாகவும் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தேசிய விண்வெளி தினம் இன்று கொண்டாடப்படுவதை அடுத்து விண்வெளி துறையின் எதிர்காலம் குறித்த கண்ணோட்டம் என்ற சிறப்பு நிகழ்ச்சிக்கு சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்ச்சி இன்று இரவு மணி 8-05 முதல் 8-35 வரை முதன்மை மற்றும் எஃப் எம் அலைவரிசைகளில் ஒலிபரப்பாகும்.

இதில் ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியாவின் நிறுவனர் டாக்டர் ஸ்ரீமதி கேசன் உடன் செய்தி ஆசிரியர் எஸ் ஜாய் கலந்துரையாடுகிறார்.

**[]<<<>>>[]**

போலந்தில் தமது வரலாற்று சிறப்புமிக்க பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று உக்ரைன் தலைநகர் கிவ் சென்றடைந்தார்.

பலத்த பாதுகாப்புடன் ரயில் மூலம் அந்நாட்டுக்கு சென்றுள்ள அவர், இன்று அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கியுடன் பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

பிரதமருடன் சென்றுள்ள இந்திய தூதுக்குழுவினரும் இந்த பேச்சுக்களில் பங்கேற்கவுள்ளனர்.

ரஷ்யா – உக்ரையன் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஆக்கப்பூர்வமான வழிமுறைகள் குறித்தும் உக்ரைன் அதிபருடன், திரு நரேந்திரமோடி பேச்சு நடத்த திட்டமிட்டுள்ளார்.

முன்னதாக உக்ரைனுக்கு தமது பயணத்தை தொடங்கும் முன் பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில், எந்த ஒரு பிரச்சினைக்கும் போர் தீர்வு ஆகாது என்பதில் இந்தியா நம்பிக்கை கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அதிபர் திரு ஜெலன்ஸ்கியுடன் நடத்தும் பேச்சுக்களை ஆவலோடு எதிர்நோக்கி இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், ரஷ்யா – உக்ரைன் போருக்கு அமைதியான முறையில் தீர்வு காணவும் இந்தியா அனைத்து உதவிகளையும் செய்யும் என்று தெரிவித்துள்ளார்.

அப்பகுதியில் அமைதி திரும்ப வேண்டுமென இந்தியா விரும்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே பொருளாதார வர்த்தக தொடர்புகள், வேளாண்மை, உள்கட்டமைப்பு, சுகாதாரம், கல்வி, பாதுகாப்பு, கலாச்சாரம், மக்கள் தொடர்பு உள்ளிட்ட விஷயங்களில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் உக்ரைன் அதிபருடன், திரு நரேந்திரமோடி பேச திட்டமிட்டுள்ளார்.

நேற்று வார்ஷாவில் போலந்து பிரதமருடன் பேச்சு நடத்திய திரு நரேந்திரமோடி, பயங்கரவாத செயல்களிலிருந்து உலகை பாதுகாப்பதில் சர்வதேச விதிமுறைகளை அனைத்து நாடுகளும் பின்பற்ற வேண்டுமென்று இரு தலைவர்களும் வலியுறுத்தினர்.

ஒவ்வொரு நாட்டின் எல்லைப் பகுதியையும், இறையாண்மையையும் பாதுகாக்க வேண்டும் என்பதிலும், வேறு எந்த நாடுகளின் குறுக்கீடும் இருக்கக்கூடாது என்றும் இரு தலைவர்களும் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இந்தியாவும் - அமெரிக்காவும் நீண்டகால நட்பு நாடுகள் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள அவர், வாஷிங்டனில் இந்திய வம்சாவளியினரிடையே கலந்துரையாடினார்.

அப்போது பேசிய அவர், இந்திய மக்கள் தங்களின் தொன்று தொட்ட பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் பாதுகாத்து வருவது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாகத் தெரிவித்தார்.

அமெரிக்கவாழ் இந்திய மக்களின் கலாச்சார மாண்புகள் இந்தியாவோடு அவர்களை பிணைக்க வைத்திருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த பயணத்தின்போது இந்தியா - அமெரிக்கா இடையே பாதுகாப்பு உற்பத்தி பொருட்கள் விநியோகத்துக்கான ஆவணம் மற்றும் இதனை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரிகள் நியமனத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகவுள்ளன.

இரு நாடுகளும் தங்களின் பாதுகாப்பு தேவைகளுக்கு ஏற்ப ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான கொள்முதலை தாராளமாக மேற்கொள்வதற்கும், இந்த ஒப்பந்த ஆவணம் வழி வகுக்கிறது.

பாதுகாப்பு உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான கட்டமைப்பை மேற்கொள்வதற்கும் இது வகை செய்கிறது.

அமெரிக்காவுடன் ஏற்கனவே ஆஸ்திரேலியா, கனடா, டென்மார்க் உள்ளிட்ட 17 நாடுகள் இதுபோன்ற ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ள நிலையில், 18-வது நாடாக இந்தியா இந்த ஒப்பந்த ஆவணத்தில் அமெரிக்காவுடன் கையெழுத்திட உள்ளது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **Loyd Austin** லஅழைப்பின் பேரில் அமெரிக்கா சென்றுள்ள திரு ராஜ்நாத்சிங், அவருடன் பாதுகாப்பு மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பான விஷயங்கள் குறிததும் பேச்சு நடததவுள்ளார்.

அமெரிக்காவின் பாதுகாப்பு ஆலோசகர் திரு ஜாக் சல்லீவனுடனும் அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள பாதுகாப்பு தொழில் உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் வட்டமேசை கூட்டத்திலும் திரு ராஜ்நாத்சிங் கலந்து கொள்கிறார்.

**[]<<<>>>[]**

மத்திய உள்துறை செயலராக மூத்த ஐ ஏ எஸ் அதிகாரி திரு கோவிந்த் மோகன் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதுவரை இப்பதவியை வகித்து வந்த திரு அஜய்குமார் பல்லா ஓய்வுபெற்றதை அடுத்து, திரு கோவிந்த் மோகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு கோவிந்த் மோகன் கலாச்சார துறை அமைச்சகத்தின் செயலராக பதவி வகித்து வந்தார்.

**[]<<<>>>[]**

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கத்தின் ஒரு பகுதியாக புதுதில்லியில் உள்ள அகாஷவாணி வளாகத்தில் தலைமை இயக்குநர் திருமதி **Maushumi** சக்ரவர்த்தி, கூடுதல் தலைமை இயக்குநர் மாதுநாக் ஆகியோர் மரக்கன்றுகளை நட்டனர்.

உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி இந்த ஆண்டு பிரதமர் திரு நரேந்திரமோடி அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இந்த இயக்கம் வலுப்பெற்று அனைத்து தரப்பு மக்களும் மரங்களை நட்டு பராமரித்து வருகின்றனர்.

**[]<<<>>>[]**

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் தாக்கல் செய்துள்ள ஜாமின் மனு மற்றும் இந்த வழக்கிலிருந்து விடுவிக்கக்கோரி தாக்கல் செய்துள்ள மனுக்கள் மீதான விசாரணையை உச்சநீதிமன்றம் அடுத்த மாதம் ஐந்தாம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளது.

இந்த வழக்குகளை விசாரித்த நீதிபதிகள் திரு சூரியகாந்த், திரு **Ujjal bhuyan** ஆகியோர் அடங்கிய அமர்வு இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

**[]<<<>>>[]**

கோவிட் பெருந்தொற்றின் பல்வேறு வகைகளையும் தடுப்பதற்கு

எம் ஆர் என் ஏ தடுப்பூசி மருந்தை பயன்படுத்துவதற்கு அமெரிக்காவின் மருந்து பொருட்கள் நிர்வாகத்துறை அனுமதி அளித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அந்நாட்டு அரசின் செய்திக்குறிப்பில், 12 வயதுக்கு உட்பட்ட அனைவருக்கும் இதனை பயன்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இத்தாலி சர்வதேச டென்னீஸ் போட்டியில் இந்தியாவின் சிந்தாந்த் **Banthia** - அமெரிக்காவின் **Tennyson whiting** இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிதிப்போட்டியின் இந்திய இணையை எதிர்த்து ஆடிய, இத்தாலி இணை வீரர்கள் காயம் காரணமாக வெளியேறியது.

இதை அடுத்து, இந்திய இணை அரை இறுதிக்கு முன்னேறியது.

**[]<<<>>>[]**

20 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று மாலத்தீவு அணியை எதிர்கொள்கிறது.

காத்மாண்டுவில் இப்போட்டி பிற்பகல் மணி 2-45-க்கு தொடங்குகிறது.